*2*

# ஆதியிலே

*"பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப்பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்"*
*(ஆதியாகமம் 1:26, 27).*

*ஒரு படிப்பைத் தொடங்குதல் என்பதற்கு ஆதியிலே என்பது மிகச்சிறந்த இடமாக உள்ளது, நமது தலைப்பின் விஷயத்தில் இது ஆதியாகமமாக உள்ளது. பெண்ணிற்குத் தேவனுடைய வடிவமைப்பு பற்றிய நமது ஆழ்ந்த சிந்தனையின் தொடர்பாக, ஆதியாகமம் 1:26, 27ல் முக்கியமான இரண்டு கருத்துக்கள் காணப்படுகின்றன. முதலாவது, "மனுஷன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தையான adam என்பது இவ்விரு வசனங்களிலும் "மனிதகுலம்" என்ற பொதுவான கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. "மனுஷனை [adam]உண்டாக்குவோமாக" என்று தேவன் கூறினார்; பின்பு இவ்வசனப்பகுதி, அவர், "ஆணும் பெண்ணுமாக" என்றும் "அவர்களைச் சிருஷ்டித்தார்" என்றும் உரைக்கிறது. "மனுஷன்" என்பதற்குப்பதில் "ஆண்" என்று இவ்விடத்தில் அர்த்தமாக வேண்டுமென்று இருந்தால், ("ஆண்," "கணவர்," மற்றும் சிலவேளைகளில் "ஒரு தனிநபர்" என்று அர்த்தப்படக்கூடிய) ish என்ற எபிரெய வார்த்தை இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும். எபிரெய வார்த்தைகளின் இந்த வித்தியாசத்தைப் பற்றி நாம் அறிந்திருத்தலானது, மீன்கள், பறவைகள், விலங்குகள் மற்றும் பூமியில் ஊரும் பிராணிகள் யாவற்றின்மீதும் ஆளுகை செய்வது ஆண் மாத்திரமல்ல, ஆனால் அந்த ஆளுகை, ஆதியாகமம் 1:28ல் adam க்கு - "பெண்ணையும்" உள்ளடக்கிய மக்களுக்கு - கொடுக்கப்பட்டது என்று நாம் புரிந்து கொள்ள உதவுகிறது. தேவன் தாம் உண்டாக்கியிருந்த எல்லாவற்றின்மீதான அதிகாரத்தை, பெண்ணைவிட ஆணுக்கு அதிகமாகக் கொடுத்திருக்கவில்லை. எல்லாவற்றையும் ஆளும் பணிப்பொறுப்பும் சிறப்புரிமையும் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருசாராருக்கும் அளிக்கப்பட்டது.*

*இரண்டாவது, தேவனுடைய படைப்பாக உள்ள "ஆண்" மற்றும் "பெண்" ஆகிய நாம் அனைவருமே அவருடைய சாயாலாகவே*

உண்டாக்கப்பட்டோம். தேவன் உடல் வடிவம் எதுவுமின்றி, ஆவி-யாய் இருக்கின்றார் (யோவான் 4:23, 24) என்ற உண்மையானது, அவர் நம்மை [அவரது] உடல்ரீதியான சாயலில் உண்டாக்கவில்லை என்று அர்த்தப்படுத்துகிறது. இந்த நிகழ்காலவேளையில் நமது உடல்கள் "பூமிக்குரிய சாயலை" கொண்டுள்ளன, இது நமது இயல்பான உடல்கள் தேவனுடைய சாயலைக் கொண்டிருப்பதில்லை என்று அர்த்தப்பட வேண்டும். நாம் உயிர்ப்பிக்கப்படும்போது, நமது உடல்கள் "வானவரின் சாயலை" தரித்துக்கொள்ளும் (1 கொரிந்தியர் 15:49). அந்த வேளையில் அது தேவன் மற்றும் இயேசு ஆகியோருடைய ஆவிக்குரிய சரீரங்களைப் போன்று (1 யோவான் 3:2; பிலிப்பியர் 3:21), ஒரு "ஆவிக்குரிய சரீரமாக" இருக்கும் (1 கொரிந்தியர் 15:44). தூதர்களைப்போன்றே ஆவிக்குரிய ஜீவிகள் (எபிரெயர் 1:13, 14) பால்பிரிவற்றவர்களாயிருக்கின்றனர் (மத்தேயு 22:30ஐக் காணவும்), இது ஆவியாய் இருக்கின்ற தேவனும் பால் பிரிவற்றவராக இருக்கின்றார் என்று அர்த்தப்பட வேண்டும். இது உண்மை யாக இருப்பதால், ஆணாக இருப்பவர், சரீரத்திற்குரிய வகையிலோ அல்லது ஆவிக்குரிய வகையிலோ, பெண்ணைக் காட்டிலும் அதிகமாகத் தேவனுடைய சாயலில் இருப்பதாகக் கருதப்படக்கூடாது.

தேவன் நம்மைத் தமது சாயாலாகப் படைத்தார்; அவர் நம்மைத் தம்முடையதுபோன்ற ஒரு ஆவிக்குரிய இயல்புடன் படைத்தார், இதில் புத்திக்கூர்மை, மன எழுச்சி மற்றும் உணர்வுகள் ஆகியவை உள்ளடங்கியிருக்கின்றன. தேவன் படைத்த எல்லாவற்றிலும், மனுக்குலம் மாத்திரமே தேவனுடைய ஆவிக்குரிய சாயலின் அச்சடையாளத்தைக் கொண்டுள்ளது. தேவன் பெண்களை, ஆண்களுக்குரிய அதே உடல் பலத்துடன் படைக்கவில்லை என்றாலும், அவர்களுக்கும் அவர் தமது சொந்த சாயலை - அவர் ஆண்களுக்குக் கொடுத்துள்ள அதே ஆவிக்குரிய சாயலை - கொடுத்துள்ளார். ஆண்களும் பெண்களும் தங்கள் உடல் அமைப்புக்களில் மாறுபட்ட வகையில் படைக்கப்பட்டனர், ஆனால் அவர்களின் ஆவிக்குரிய இயல்பானது ஒரேமாதிரியாகவே படைக்கப் பட்டது. அவர்கள் தேவசாயலாகப் படைக்கப்பட்டனர். ஆவிக்குரிய இயல்பில் இருவரில் எவரும் மற்றவரைவிட உயர்ந்தவராகவோ அல்லது தாழ்ந்தவராகவோ இருப்பதில்லை.

## துணைவியா அல்லது வேலைக்காரியா?

தேவன் பெண்களை, ஆண்களுக்கு வேலைசெய்யும் உதவியாட் களாகப் படைத்தாரா? சிலர், KJV வேதாகமத்தில் ஆதியாகமம் 2:18, 20 வசனப்பகுதியில் "help meet" [தமிழ் வேதாகமத்தில் "ஏற்ற துணை"] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, பெண் என்பவள் ஆணின் உதவியாளாக, அவனது தேவைகளுக்கு கடமையாற்றுதல் என்ற ஒரே நோக்கத்திற்காகவே படைக்கப்பட்டாள் என்று அர்த்தப்படுவதாகப் புரிந்து கொள்கின்றனர். இது ஒரு துரதிர்ஷ்டமான முடிவெடுத்தலாக உள்ளது.

"Meet," "fit," or "suitable" - என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *neged* என்ற வார்த்தை அனேகமாக, (NASB வேதாகமத்தின் அடிக்குறிப்பு ஒன்றில்

மொழிபெயர்க்கப்பட்டுள்ளபடி) “இணையாயிருக்கும்படி” என்றோ அல்லது “ஒப்பிடக்கூடிய” (NKJV வேதாகமம்) என்றோ அர்த்தப்படுவதாயிருக்கும். இது ஏவாளைப் பற்றி ஆதாம் மேற்கொண்டிருந்த முடிவாகக் காணப்படுகிறது, ஏனெனில் அவர், “இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள்” என்று கூறினார் (ஆதியாகமம் 2:23).

மிருகங்களில் எதுவும் ஆதாமுக்கு ஒப்பானவைகளாய் இருக்கவில்லை; அவைகள் அவருக்கு ஏற்ற துணையாயிருக்கவில்லை. அவைகள் அவருடன் ஆவிக்குரிய அளவீட்டைப் பகிர்ந்துகொள்ள முடியவில்லை. சமூக மட்டத்தில் அவருடன் இணைந்திருக்க இயலவில்லை, ஏற்ற வகையிலான பாலுறவு இணையை அளிக்க இயலவில்லை, மற்றும் இனப்பெருக்கத்தில் அவருக்கு உதவ இயலவில்லை. ஆதாமின் உடல்ரீதியான, புத்திகூர்மை சார்ந்த மற்றும் உணர்வெழுச்சி ரீதியான இயல்புகளிலும் அமைவுகளிலும் அவருக்கு உதவக்கூடிய பெண் ஒருத்தி அவருக்குத் தேவையாயிருந்தாள். தேவன் பெண்ணை, ஆதாமுக்குப் பூரணமான துணைவியாக இருக்கும்படி, அதன்மூலம் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒருவர் மற்றவரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்படி படைத்தார்.

அடிக்கடி திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ள பின்வரும் கருத்து, உண்மையானதாக இருக்கலாம்: ஆதாம் ஏவாளைத் தனது காலின்கீழ் போட்டு மிதித்துவிடாதிருப்பதற்காகத் தேவன் அவனது காலில் இருந்து ஒரு எலும்பை எடுத்து ஏவாளைப் படைக்காதிருந்தார், மேலும் ஏவாள் ஆதாமின்மீது ஆளுகை செய்யாதிருப்பதற்காகத் தேவன் ஆதாமின் தலையில் இருந்து ஒரு எலும்பை எடுத்து ஏவாளைப் படைக்காதிருந்தார், ஆனால் ஏவாள் ஆதாமுக்குத் துணைவியாக இருக்கும்படியாகத் தேவன் ஆதாமின் விலாவிலிருந்து எலும்பை எடுத்து ஏவாளைப் படைத்தார். பெண் என்பவள் ஆணைவிடத் தாழ்ந்தவளாகக் கருதப்பட வேண்டும் என்பதற்கோ அல்லது அவள் ஆணினால் ஆதிக்கம் செலுத்தப்பட வேண்டும் என்பதற்கோ ஆதியாகமத்தில் எந்த ஆலோசனையும் காணப்படுவதில்லை. விசேஷித்த வகையிலான தோழமையொன்றில் ஆணின் தேவையை நிறைவேற்றுவதற்காகத் தேவன் பெண்ணைப் படைத்தார்.

## இயல்பான ஏற்பாடு

ஆணின் இணை பாகமாகப் பெண்ணைப் படைத்த நிகழ்வானது மற்ற மறைகருத்துக்களையும் கொண்டுள்ளது. ஆதாமுக்குத் துணையாய் இருக்கும்படி இன்னொரு ஆணைப்படைக்காமல், தேவன் ஒரு பெண்ணைப் படைத்தார். மனிதன் “தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடு இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்” என்பதே தேவன் மனிதனுக்குச் செய்த ஏற்பாடாக உள்ளது (ஆதியாகமம் 2:24).

பெண் என்பவள் ஆணுக்கு இயல்பான பாலுறவுக் கூட்டாளியாய் இருக்க வேண்டும் என்பதே தேவன் பெண்ணைப் படைத்ததற்கான நோக்கமாய் இருந்தது/இருக்கிறது. அவள் இன்னொரு

பெண்ணுக்காகப் படைக்கப்படவில்லை. அவளை ஆண், இன்னொரு ஆணைக்கொண்டிருப்பதற்குப் பதிலாகத் தனக்குப் பாலுறவு கூட்டாளியாகக் கொண்டிருப்பதற்காகவே தேவன் பெண்ணை ஆணுக்காகப் படைத்தார். இது தேவனுடைய இயல்பான முறைமையாக உள்ளதென்று பவுல் வலியுறுத்தினார். புறஜாதியாருடைய பாவம் நிறைந்த அக்கிரமங்களைப் பற்றி, அவைகள் தேவனுடைய திட்டத்திற்கு விரோதமானவைகளாய் இருந்ததாகப் பவுல் எழுதினார்: "... அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்" (ரோமர் 1:26, 27). மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமானது, "ஒருவன் பெண்ணோடே சம்யோகம் பண்ணுகிறதுபோல ஆணோடே சம்யோகம்பண்ணினால், அருவருப்பான காரியம் செய்த அவ்விருவரும் கொலைசெய்யப்படக் கடவர்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக" என்று உரைத்தார் (லேவியராகமம் 20:13). தேவன் ஆணையும் பெண்ணையும் ஒருவருக்கொருவர் துணைவராய் இருக்கும்படி படைத்தார். அவர் ஆண்களை ஆண்களுக்காகவோ அல்லது பெண்களைப் பெண்களுக்காகவோ பாலுறவுத் துணைவர்களாய் இருக்கப் படைக்கவில்லை.

## உடல் அமைவு செயல்பாட்டைச் சுட்டிக்காண்பிக்கிறது

ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் உறவில் அவர்களின் செயல்பாடானது, அவர்களின் உடல் அமைவினால் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது. கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்கள் ஒரு தவறான பயன்பாட்டை ஏற்படுத்தியிருந்தனர் என்பதை, 1 கொரிந்தியர் 6:13அவில் பவுலின் கூற்று சுட்டிக்காண்பிக்கலாம். அவர், "வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்" என்று எழுதியபோது, சுலபமாகப் புரிந்துகொள்ளப்படக்கூடிய ஒரு சத்தியத்தை உரைத்தார். நாம், வயிற்றின் செயல்பாட்டுப்பயனை உற்றுக்கவனிக்கும்போது, அதற்கென்று தேவன் கொண்டுள்ள நோக்கத்தைத் தீர்மானிக்க முடியும், அதேபோன்று நாம் மனித உடலின் மற்ற உறுப்புக்களுடைய தக்க பயன்பாட்டையும், தேவன் படைத்த மற்ற விஷயங்களின் செயல்பாட்டுப்பயனையும் தீர்மானிக்க முடியும்.

ஆண்களும் பெண்களும் மிகச்சிறந்த வகையில் எவ்வாறு செயலாற்ற முடியும் என்பதை உற்றுக்கவனிப்பதன்மூலம், அவர்களுக்கென்று தேவன் நோக்கங்கொண்டுள்ள செயல்பாடுகளை நாம் தீர்மானிக்க முடியும். ஆண்களல்ல பெண்களே பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர் என்ற வெளிப்பாடு நமக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் (1

தீமோத்தேயு 5:14), அதை முடிவு செய்வதற்கு அந்த வெளிப்பாடுகூட நமக்கு அவசியமாய் இருப்பதில்லை. ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் உடல் அமைவானது, பல விஷயங்களில் அவர்களின் பணிப்பொறுப்பைத் தீர்மா னிக்கிறது. இருப்பினும், சில வேளைகளில் நமது சொந்தத் தவறான முன் அனுமானங்கள், ஆண்கள் அல்லது பெண்களுக்கு அதிகம் இயல்பாயிராத பணிப்பொறுப்புகளை, அதாவது சமைத்தல், வீட்டைச் சுத்தம் செய்தல், அல்லது தோட்டத்தில் வேலைசெய்தல் போன்ற பணிகளை ஒருவருக்குப் பதில் இன்னொருவருக்கு அளிக்கக் காரணமாகின்றன. இயற்கையான உடல் அமைவு அல்லது தேவனுடைய வெளிப்பாடு ஆகியவற்றினால் எந்தப் பாலினத்தின்மீதும் விதிக்கப்பட்டிராத கட்டுப்பாடுகளை வடிவமைக் காதபடி நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

பெண்கள் ஒரு குழு என்ற வகையில் ஆண்களைப்போல் அவ்வளவு பலம் பொருந்தியவர்களாய் இருப்பதில்லை என்ற உண்மையானது (1 பேதுரு 3:7), பெரும்பாலும் ஆண்களின் பணிப்பொறுப்பு என்று கருதப்படக்கூடிய உடல்ரீதியான செயல்பாடுகளை அவர்கள் [பெண்கள்] செய்ய இயலாதவர்களாயிருக்கின்றனர் என்று அர்த்தப்படுத்து வதில்லை. அதுபோலவே, ஆண்களும் மிருகபலம் தவிர மற்ற திறமைகள் தேவைப்படுகிற, பெண்களின் பொறுப்பென்று கருதப்படுகிற செயல் பாடுகளைச் சாமர்த்தியமாகக் கையாளக்கூடிய திறமை கொண்டுள்ளனர்.

ஒருவேளை, ஆண்களின் உடல் அமைவேகூட, அவர்கள் நடத்துனர்களாய் இருக்க வேண்டும் என்று தேவன் நோக்கங்கொண் டுள்ளதைச் சுட்டிக்காண்பிப்பதாக இருக்கலாம். ஆண்கள், பெண்களைவிட பலத்ததும் அதிகம் அதிகாரம் இடுவதுமான குரல்களைக் கொண்டுள்ளனர். முழுமையாகப் பார்த்தால், அவர்கள் உடல்ரீதியாக அதிக பலம் வாய்ந்தவர்களாகவும் மாபெரும் உடல் சகிப்புத்தன்மை உடையவர்களாகவும் இருக்கின்றனர். அப்படிப்பட்ட அனுகூலங்களைச் சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் குறைத்துவிட்டன; இருப்பினும், ஆண் தன்மைக்குரிய பண்புகள், ஆண்களுக்கு நடத்துவத்துவப் பணிப் பொறுப்புக்களை நியமிப்பதில் பொதுவான முனைப்பை அவர்களுக்கு வழங்கியுள்ளன.

கிறிஸ்தவ ஆண்களும் பெண்களும், சமூகத்தினால் நிலைநாட்டப் பட்டுள்ள பணிப்பொறுப்புகளில் இருந்து மாறுபட்டவைகளைத் தேட உரிமை கொண்டுள்ளனர். என்றாலும், பாரம்பரியப் பணிப்பொறுப் புக்களை முறித்தலுக்குக் கிறிஸ்தவர்கள் உரிமை கொண்டுள்ளனர் என்பதற்காக மாத்திரம் அவ்வாறு செய்வது ஞானமற்றதாக உள்ளது. கிறிஸ்தவ ஆணோ பெண்ணோ, கிறிஸ்துவின் நோக்கத்தைத் தடைசெய்யும் தனது பிடிவாதமான செயல்களில் நிலைத்திருந்தால் நிச்சயமாகவே தேவனு டைய சித்தத்தை மீறுகின்றவர்களாய் இருப்பர். கிறிஸ்தவ உரிமையைப் பயன்படுத்துதலானது மற்றவர்களுக்குப் பயனுள்ளதாய் இருப்பதற்கு மாறாக மற்றவர்களை அழிப்பதாயிருந்தால், மற்றும் விசேஷமாக அது ஒரு சகோதரன் இடறுவதற்குக் காரணமாயிருந்தால் அந்த உரிமை யானது துறக்கப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 9:19-23). பவுல், "மாம்சம்

*புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிற தற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்" என்று எழுதினார் (ரோமர் 14:21).*

## முடிவுரை

பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகியோரின் உறவுமுறைகள் பற்றிய எந்த அணுகுமுறையும், தேவனுடைய படைப்பின் நோக்கத்திற்குத் தக்க வகையிலான ஆழ்ந்த சிந்தனையைக் கொடுக்க வேண்டும். இவற்றில் சிலவற்றை, ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் இயல்பு மற்றும் அமைவு ஆகியவற்றைக் கொண்டு தீர்மானிக்க முடியும். மற்றவைகள் தேவனுடைய வெளிப்பாட்டை ஜாக்கிரதையாய்ப் படிப்பதின் மூலம் கற்றுக்கொள்ளப்பட வேண்டும்.